2015 செப்டம்பர் 4]

சாக்கோட்டையிலும், அடுத்துள்ள 50 ஏக்கர் பரப்பளவில் மருதானூரிலும் விதை நேர்த்தி செய்து, சேமித்து வைக்க தற்போதுள்ள இரண்டு கிட்டங்கிகள் போதுமானதாக இல்லை. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மண்ணின் மைந்தர் என்ற முறையிலும், எங்களுடைய மாவட்டத்தின் அமைச்சர் என்ற முறையிலும், என் சொந்த ஊர் சாக்கோட்டை என்ற காரணத்தினாலும், விதைப் பண்ணைக்குக் கூடுதல் கிட்டங்கிகளும் மற்ற வசதிகளும் செய்து தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சி மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாக்கோட்டையில் ஆய்வு செய்து, தேவையிருப்பின் நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய மேலான பார்வைக்குக் கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 229, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

229—

உயர்மட்டப் பாலம்

***33270—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அஞ்செட்டி-ஒகேனக்கல் சாலையில் அஞ்செட்டி-புதூர் இடையேயுள்ள தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதி, அஞ்செட்டியிலிருந்து ஒகேனக்கல் செல்லும் சாலையில் அஞ்செட்டியிலிருந்து புதூர் வரையுள்ள தரைமட்டப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக அமைக்கும் கருத்துரு ஆய்வில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தளி தொகுதியில் அஞ்செட்டியிலிருந்து ஒகேனக்கல் செல்லும் சாலையில் அஞ்செட்டி-புதூர் இடையேயுள்ள ஆற்றின் குறுக்கே தரைமட்டப் பாலம் அமைந்துள்ளது. சுற்றுலாத் தலமான ஒகேனக்கல்லுக்கு மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும், அண்டை மாநிலமான கர்நாடகா மற்றும் பெங்களூருவிலிருந்தும் தினந்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்களிலே சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர். கடந்த 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின் காரணமாக, அந்தப் பாலத்தில் இரண்டு நபர்கள் அடித்துச் செல்லப்பட்டதோடு, 25-க்கும் மேற்பட்ட கால்நடைகளும் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. ஆகவே, நான் ஏற்கெனவே கூறியதைப்போல, தினந்தோறும் நூற்றுக்கணக்கான வாகனங்களிலே சுற்றுலாப் பயணிகளும், பொதுமக்களும் அந்தப் பாலத்தைக் கடந்து செல்ல வேண்டியிருப்பதால், அந்தப் பாலத்தை உயர்மட்டப் பாலமாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

மேலும், அஞ்செட்டியிலிருந்து தக்கட்டி, ஊதிபுரம் வழியாக அர்த்தக்கல் செல்கின்ற சாலையில், ஊதிபுரம் அர்த்தக்கல் இடையே இரண்டு தரைமட்டப் பாலங்கள் உள்ளன. அவற்றை உயர்மட்டப் பாலங்களாகக் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேன்கனிக்கோட்டை, அஞ்செட்டி, நாட்றாம்பள்ளி சாலை, நெடுஞ்சாலைத் துறை, கிருஷ்ணகிரி கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலையில் கிலோ மீட்டர் 23/8-ல், தொட்டஹல்லா ஆறு குறுக்கிடும் பகுதியில் 23 வரிசை சிறுகுழாய்கள் கொண்ட தரைமட்டப் பாலம் உள்ளது. 2015-2016 ஆம் ஆண்டு நபார்டு வங்கி உதவித் திட்டத்தின்கீழ் 5.2 கோடி ரூபாய் செலவில் இவ்விடத்தில் உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு அரசுத் திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. டி. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பாலம் நபார்டு திட்டத்திலே சேர்க்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், கர்நாடக மாநில எல்லையோரம் உள்ள அஞ்செட்டியிலிருந்து அர்த்தக்கல் வரையுள்ள சாலை 3 மீட்டர் அகலம் கொண்ட ஒரு வழிப் பாதையாகும். அந்தப் பாதையிலே தினந்தோறும் ஏராளமான வாகனங்கள் செல்வதால், அடிக்கடி போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது. ஆகவே, 3 மீட்டர் அகலம் கொண்ட ஒரு வழிச் சாலையை 7 மீட்டர் அகலம் கொண்ட இரு வழிச் சாலையாக அகலப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தச் சாலையில் செல்கின்ற வாகனங்களின் செறிவைக் கணக்கிட்டு, அதிக வாகனங்கள் செல்லுமேயானால்,

அதற்கேற்றவாறு சாலையை அகலப்படுத்த, நிதிநிலைக்கேற்ப அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. முத்துராமலிங்கம் அவர்கள்.*

திரு. ம. முத்துராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், திருமங்கலம் சட்டமன்றத் தொகுதியில், திருமங்கலம் நகரத்தின் மையப் பகுதியிலிருந்து மதுரை விமான நிலையம் வரை செல்லக்கூடிய பழைய சாலையில் ஓர் இரயில்வே கடவு இருக்கின்றது. அந்த இரயில்வே கடவைக் கடந்து 25, 30 கிராமங்கள் இருக்கின்றன. மருத்துவமனை, பள்ளிக்கூடம், கல்லூரி போன்ற இடங்களுக்கு இந்த இரயில்வே கடவைக் கடந்து செல்லக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. மதுரை மக்கள் அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய இந்தச் சாலையிலுள்ள அந்தக் கடவு, ஒரு நாளைக்கு கிட்டத்தட்ட 20 தடவை இரயில் வந்து செல்லும்போது அடைக்கப்படுகிறது. இரயில்வே கடவு வழியே இருக்கக்கூடிய வாகனப் போக்குவரத்து எண்ணிக்கையும் ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளைக் கடந்துவிட்டதாகச் செய்திகள் வந்துள்ளதாக அறிகிறேன். ஆகவே, திருமங்கலம் நகர மையப் பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இரயில்வே மேம்பாலத்தினை, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்த வருடம் அமைத்துத் தர முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 24 மணி நேரத்தில் இரயில் கடவில் செல்லும் இரயில்களின் எண்ணிக்கை, இரயில்வே கடவு மூடப்பட்டிருக்கும்போது இருபக்கங்களிலும் நிற்கின்ற வாகனங்களின் எண்ணிக்கை ஆகியவற்றைக் கணக்கிட்டு, அதற்குப் புள்ளிகள் கொடுத்து, அந்தப் புள்ளிகள் ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளுக்குமேல் இருக்குமேயானால், அங்கே இரயில்வே*

2015 செப்டம்பர் 4]

மேம்பாலம் கட்டுவதற்கு மத்திய அரசு அனுமதி வழங்குகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அந்த இரயில்வே கடவு வழியிலே வாகனங்களின் எண்ணிக்கை ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளுக்குமேல் இருப்பதாக இங்கே குறிப்பிட்டுள்ளார்கள். இரயில்வே வாகன அலகுகளை மத்திய இரயில்வே அமைச்சகம்தான் கணக்கிடுகின்றது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இதனை இரயில்வே துறையினரின் கவனத்திற்குக் கொண்டு செல்லும். மாண்புமிகு உறுப்பினர் சொல்வதுபோல், ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளுக்குமேல் இருக்குமேயானால், அப்பகுதியில் இரயில்வே மேம்பாலம் கட்டுவதற்கு அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள 24 சுங்கச்சாவடிகளில் மத்திய அரசு கட்டணத்தை சில நாட்களுக்கு முன்பாக உயர்த்தியிருக்கிறது. சரக்குகளை ஏற்றிவருகின்ற வாகனங்களுக்கான கட்டணம் 200 ரூபாயிலிருந்து 250 ரூபாயாக உயர்த்தப்பட்டிருப்பது என்பது நமக்கு கடும் பாதிப்பை ஏற்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே, கட்டண உயர்வைத் திரும்பப் பெறுவதற்கு மத்திய அரசிடம் கேட்டுக்கொண்டிருக்கிறீர்களா அல்லது கட்டண உயர்வை ஏற்றுக்கொண்டிருக்கிறீர்களா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மானியக் கோரிக்கையின்போது இதுகுறித்து தெளிவான விளக்கத்தைக் குறிப்பிட்டிருந்தேன். அப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவையில் இல்லை. இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கட்டுப்பாட்டில் 40 சுங்கச்சாவடிகள் தமிழ்நாட்டில் உள்ளன. அந்தச் சுங்கச்சாவடிகள் ஆண்டுக்கு ஒருமுறை கட்டணத்தை உயர்த்தி வசூல் செய்துகொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டிலுள்ள அனைத்து சுங்கச்சாவடிகளின் கட்டணத்தையும் ஒரே சீராக்க

வேண்டுமென்றும், ஐந்தாண்டுகளுக்கு ஒரு முறை உயர்த்துவது குறித்து பரிசீலிக்க வேண்டுமென்றும் மத்திய அரசை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வலியுறுத்தியிருக்கிறது என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முனைவர் கோவி. செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவிடைமருதூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்டுள்ள ஆடுதுறையிலிருந்து கும்பகோணம்-திருவாரூர் சாலைக்கும், கும்பகோணம்-மயிலாடுதுறை சாலைக்கும் இடையே இரயில்வே கடவு இருக்கிறது. நரசிங்கம்பேட்டை, திருவிடைமருதூர், ஆடுதுறை ஆகிய மூன்று இடங்களில் இரயில்வே கடவுகள் இருந்தாலும்கூட, ஆடுதுறையிலுள்ள இரயில்வே கடவு வழியாக அதிகமான வாகனங்கள் சென்று வருகின்றன. எனவே, ஆடுதுறையில் இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தருமாறு இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். ஆடுதுறை நெல் ஆராய்ச்சி மையத்தைச் சார்ந்த ஊழியர்கள் அதன்வழியாகச் சென்று வருகிறார்கள். மேலும், அரசு நலத் திட்ட நிகழ்ச்சிகளுக்கு எங்கள் மாவட்டத்திற்கு அதிகமாக வருகின்ற மாண்புமிகு அமைச்சர்களும், எங்கள் மாவட்டத்தைச் சார்ந்த மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்களும், எங்கள் மாவட்டத்திலிருக்கின்ற ஆளும்கட்சி சட்டமன்ற உறுப்பினர்களும் அதன்வழியாகச் செல்லும்போது, 10 நிமிடங்களுக்கும் மேலாகக் காத்திருக்க வேண்டிய சூழல் எழுகின்றது. எனவே, ஒட்டுமொத்த தஞ்சை மாவட்ட மக்களின் கோரிக்கையாக, ஆடுதுறையில் இரயில்வே மேம்பாலம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப்போல, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற இரயில்வே கடவு வழியாக ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளுக்குமேல் வாகனங்கள் செல்லுமேயானால், மத்திய அரசு அங்கே இரயில்வே மேம்பாலம்

கட்ட அனுமதி வழங்கும். எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஆடுதுறை இரயில்வே கடவில் உயர்மட்டப் பாலம் வேண்டுமென்று குறிப்பிட்டுள்ளார்கள். அங்கே ஆய்வு செய்து, அந்த ஆய்வில் ஒரு இலட்சம் இரயில்வே அலகுகளுக்குமேல் வாகனங்கள் இருக்கும்பட்சத்தில், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு மத்திய இரயில்வே துறையினரின் கவனத்திற்குக் கொண்டுசென்று, அதற்குண்டான நடவடிக்கையை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 230, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

230—

பிரட் தொழிற்சாலை

***51350 திருமதி எஸ். கணிதா சம்பத்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதியில் பிரட் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் தொகுதியில் பிரட் தயாரிக்கும் தொழிற்சாலை தொடங்குவதற்கான திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேநேரத்தில், தொழில் முனைவோர்கள் முன்வருவார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு பல்வேறு மானியங்களைத் தருவதற்குத் தயாராக இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.